பக்கங்கள் 8 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 25-2-62 ஞாயிறு | இதழ் 37

## 'புதின'த்தின் புதினம்

வாசக நேயர்களுக்கு நல்ல புதினம் சொல்லுகிறோம்.

அடுத்தவாரம் (4-3-62) முதல் 'புதினம்' பன்னிரண்டு பக்கங்களோடு வெளிவரும்!

'பன்னிரண்டு பக்கங்களா? நல்லதுதான். ஆனாலும் அதில் புதினமென்ன? முன்பு ஆரம்பத்தில் 1௦ பக்கங்களோடுதானே 'புதினம்' வெளிவந்து கொண்டிருந்தது' என்பீர்களா?

இந்தப் பன்னிரண்டு பக்கங்களும் இனி முற்றிலும் புதுமையான முறையில் அமையப்போகின்றன!

ஈழநாட்டில் மிகவும் புகழ்வாய்ந்த திறமையான எழுத்தாளர்கள் சிலர் புதினத்தின் சுவையை அதிகரிப்பதில் பங்கு கொள்கிறார்கள்.

கவர்ச்சிகரமான படங்களும், கேலிச்சித்திரங்களும் நிறைய இடம் பெறுகின்றன.

இத்தனை சிறப்பான அம்சங்களுக்கும் நேயர்கள் ஐந்தே ஐந்துசதம் கூடுதலாகக் கொடுக்கவேண்டியிருக்கும். அடுத்த இதழ் தொடக்கம் 'புதினம்' தனிப்பிரதி 20 சதமாகிறது. ஓராண்டுக் கட்டணம் ரூபா 10. 00.

அடுத்த இதழை ஆவலோடு எதிர் பார்த்திருப்பீர்கள். உங்களுக்கு மிகவும் திருப்திதரத்தக்க விதத்தில் சுவையான செய்திகளைத் தருவதற்கு புதினமும் ஆவலாக உள்ளது!

— ஆசிரியர்.

# இலக்கியமா? சமயமா?

# பாடத்திட்டத் திருக்கூத்துக்கள்!

சைவசமயத்தவர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஆகியஎந்தச்சமூகத்தைச் சேர்ந்த மாணவனாயிருந்தாலும் சரி, 'தமிழ்இலக்கியம்' என்ற பாடத்தை ஜி. சி. ஈ. பரீட்சைக்கு எடுக்க விரும்பினால் சில குறிப்பிட்ட புத்தகங்களைப் படிக்கவேண்டி இருந்தது. 'தமிழ் இலகியம்' படிக்க விரும்பும் மாணவனொருவன் 'சைவத்'தையும் பற்றிப் படிக்கவேண்டிது தவிர்க்க முடியாத இயற்கை நியதியாகும். தரமான பழைய தமிழ் இலக்கியங்கள் பல சைவத்தைப் பற்றித்தான் சொல்கின்றன.

ஆனால் இப்போது நம்முடைய கல்வி இலாகாவினர் இஸ்லாமிய சமூகத்தாரைத் திருப்தி செய்யும் நோக்கத்துடன், முழுவதும் இஸ்லாமிய கலாச்சாரம் பற்றிக் கூறும் புத்தகங்களான 'சீறாப்புராணம்', 'யூசுப் ஸுலைகா', 'கலையும்பண்பும்' முதலிய புத்தகங்களை 'தமிழ் இலக்கியம்' என்ற பாடத்துக்குரிய புத்தகங்களாகப் போட்டிருக்கிறார்கள்.

அது பற்றி நமக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை!

ஆனால்—

கத்தோலிக்கர்களும், மற்றைய கிறிஸ்தவர்களும் வேண்டிக் கேட்டுக்கொண்டால், அவர்களுக்கும் அவர்களுடைய கலாச்சாரத்தையும் சமயத்தையும் பற்றிக் கூறும் புத்தகங்களையே 'தமிழ் இலக்கிய' பாடத்துக்குரிய புத்தகங்களாகப் போட நம்முடைய அரசினர் துணிவார்களா?

இது மாதிரியே புத்த சமயத்தைச் சேர்ந்த ஒருவர் 'தமிழ் இலக்கிய' பாடத்தை ஜி. சி. ஈ பரீட்சைக்கு எடுக்க விரும்பினால் புத்த சமயம், சிங்கள கலாசாரம் முதலியவை பற்றிக் கூறும் தமிழ் நூல்களிலேயே அவருக்குப் பரீட்சை வைப்பார்களா?

இப்படியே போனால் என்ன நடக்கும்?

தமிழ் இலக்கிய பாடமாக அது இருக்காது! சமய பாடமாக மாறிவிடும்!!

இப்படியான ஒரு காரியத்தைச் செய்யக்கூடிய திறமை நமது கல்வி இலாகாவுக்கே உரிய ஒரு தனித் திறமையாகும்!

ஐயா, பெரியவர்களே! ஒரு வார்த்தை—

கல்வி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட புனிதமான ஒரு விஷயம். உங்கள் தூ அழுக்குப்படிந்த கைகளை அதிலே வைக்காதீர்கள்!


# தொண்டமான் - அஸீஸ் மீண்டும் பிளவு!

## சோமசுந்தரத்தின் திடீர் திருப்பம்!

தொண்டமான், அஸீஸ் இருவருக்குமிடையே மோதல் ஏற்பட்டிருப்பதாக புதினத்துக்கு நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது. அனேகமாக இம்மாத இறுதியில் இரு பெரும் தோட்டத் தொளிலாளர் தலைவர்களிடையே பிளவு ஏற்பட்டுவிடலாம்!

தற்போது வெளிநாட்டிலிருப்பவரும், திரு. தொண்டமானோடு இணைந்து அளப்பரிய சேவைகள் புரிந்து வந்தவருமான திரு. எஸ். சோமசுந்தரம், ஜனாப் ஏ. அஸீஸோடு சேர்ந்துவிட்டாரெனத் தெரிகிறது.

எது எப்படியிருந்தாலும் தோட்டத் தொழிலாளர் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல், அப்பாவித் தொழிலாளர்கள் பிரச்சினையைச் சுற்றிக் கருமேகங்கள் சூழ்ந்துவிட்டதன் அறிகுறியேயாகும்!



கொலைகாரன் அடல்ப் ஈச்மனின் கனல் கக்கும் கொடூரப் பார்வை இது! இவனது வரலாறு இந்த இதழில் ஆரம்பமாகிறது. நான்காம் பக்கத்துக்கு வாருங்கள்!

## என்ன சேதி?

**2 வது ஆண்டு விழா.**

திருக்குறள் நாடகமன்றத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, யாழ்- நகர மண்டபத்தில் திரு க. பெ. முத்தையாவின் தலைமையில் கடந்த 17—2—62 அன்று நடைபெற்றது.

✠ ✠

**லூர்து நாயகி திருவிழா.**

யாழ்ப்பாணம் கத்தோலிக்க மக்களால் கடந்த 18—2—62 ஞாயிற்றுக்கிழமையன்று, சிறுதீவு லூர்து நாயகி திருவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

✠ ✠

**"கலை முரசு"**

சம்மாந்துறையிலிருந்து வெளிவரும் 'கலை முரசு' என்ற மாதப் பத்திரிகையின் முதலாம் இதழ் வந்து கிடைக்கபபெற்ருேம்.

✠ ✠

**திருக்கேதீச்சரம் சிவாஞ்சலி.**

'நாவலர் தாசன்' எழுதிய 'திருக்கேதீச்சரம்—சிவாஞ்சலி' என்ற நூல் வந்து கிடைக்கப்பெற்ருேம்.

✠ ✠

**'அறிவரலை'**

சாய்ந்த மருதுவிலிருந்து வெளிவரும் 'அறிவரலை' என்ற இஸ்லாமிய இலக்கியத் திங்களிதழின் இரண்டாவது இதழ் வந்து கிடைக்கப் பெற்ருேம்.

✠ ✠

**"கொக்கரக்கோ"**

அழகனர் எழுதிய 'கொக்கரக்கோ' என்னும் குழந்தைக்கவிதைக் கொத்து கிடைக்கப் பெற்ருேம். குழந்தைக்கவிஞர் திரு அழ. வள்ளியப்பாவின் சிறப்புரையோடு கூடிய இக்கவிதைக் கொத்திலுள்ள பாடல்கள் அத்தனையும் குழந்தைகள் குதித்துக் கொண்டு பாடக்கூடிய விதமாக, எளியநடையில் அருமையாக அமைந்திருக்கின்றன. புத்தகத்தின் அமைப்பு வெகுகவர்ச்சியாகவுள்ளது.

✠ ✠

**தேனமுத இலக்கிய மன்றக் கூட்டம்.**

தேனமுத இலக்கியமன்றப் பொதுக்கூட்டம் மட்டக்களப்பு கொமேஷியல் கல்லூரி மண்டபத்தில் சென்ற 18-2-62ல் நடைபெற்றது. திரு தமிலை மகாலிங்கம் கூட்டத்துக்குத் தலைமைவகித்து உரை நிகழ்த்தினர்.

# திரை மறைவில்

### கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாஸே துங்கின் ரகசியக் கடிதம்!

ஆசிய ஆபிரிக்க நாடுகளின் கம்யூனிஸ்ட் தலைவர்கள் மகாநாடு இந்த வசந்த காலத்தில் பீகிங்கில் நடைபெறவிருக்கிறது. அதைப் பயன் படுத்திக்கொண்டு சீனத் தலைவர் மாஸேதுங், குருஷ்சேவுடன் உள்ள கருத்துவேற்றுமைகளை மோத விட்டு 'உண்டு இல்லை' என்று ஒரு கை பார்த்துவிடுவாரா? என்ற பேச்சு அரசியல் அவதானிகள் மத்தியில் பலமாக அடிபடுகிறது. முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகவாழ்வு சாத்தியம் என்ற குருஷ்சேவின் கொள்கைக்கும், மாஸே துங்கின் தீவிரக் கொள்கைக்குமிடையே மகாநாட்டில் பலத்த மோதல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பீகிங் மகாநாட்டுக்கு எல்லா ஆசிய ஆபிரிக்க நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அழைக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான ஒரு அழைப்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வந்திருக்கிறது. குருஷ்சேவின் கொள்கையைத் தடுத்து நிறுத்தாவிடில், உலக கம்யூனிசத்துக்கே அழிவு ஏற்படுமென்று மாஸேதுங் அக் கடிதத்தில் கூறியிருப்பதோடு தான் சொன்னபடி கேட்காவிடில் மாஸ்கோவுடன் தொடர்பை நிறுத்திக் கொள்வதற்குத் தயாராக இருப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி எந்தக் கோஷ்டியை ஆதரிக்கப்போகின்றது என்பதுதான் கேள்வி? ஸ்டான்லி திலகரத்தின போன்ற தீவிரவாதப் போக்குடைய வெகு சிலர்தான் சீனவின் பக்கத்தில் இருக்கிருர்கள். கெனமன் போன்ற 'பெருந்தலை'கள் ரஷ்யப் போக்கையே ஆதரிக்கின்றன. ஆனல் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் ஸ்டான்லி திலகரத்தின போன்றதீவிரவாதிகளுக்கே ஆதரவு பெருகி வருவது குறிப்பிடத்தக்கது.

### லண்டனுக்கு அனுப்பப்பட்ட பத்திரிகை நிருபர்.

நம்முடைய பெருமைக்குரிய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சில காலத்திற்கு முன்னல் லண்டன் சென்று வந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அப்போது அங்குள்ள பத்திரிகைகள் எல்லாம் பிரதமரைப்பற்றிய செய்திகளைப் பெரிதாகப் போட்டுப் பிரமாதப் படுத்தின! பிரதமர் லண்டன் போகப்போகிருர் என்ற செய்தி தெரிந்ததும் இங்குள்ள பத்திரிகை ஸ்தாபனம் ஒன்று தனது நிருபர் ஒருவரை லண்டனுக்கு அனுப்பியது. அந்த நிருபர் லண்டனுக்குப் போனதும் அங்குள்ள பத்திரிகைக்சாரர்களையெல்லாம் கண்டுபேசி நடைபெற வேண்டிய திட்டங்களுக்கெல்லாம் முறையாக வழி வகுத்து வைத்தார். பிறகென்ன....... நம்முடைய பிரதமருக்கு அங்கு நல்ல வரவேற்பு கிடைத்தது! அதன் பயனக மந்திரிகளின் வட்டாரத்தில் அந் நிருபரின் புகழ் பன்மடங்கு உயர்ந்தது! மந்திரிகள் பலர் இந்த மாதிரியான பற்பல விஷயங்களுக்காக அந்த நிருபரின் தயவை நாடத்தொடங்கியதும் பத்திரிகை மசோதாவிற்குக் 'கொள்ளி வைக்கும் படலம்' ஆரம்பமாயிற்று!

### 'ஒப்சேவர்' பத்திரிகையும் ஜே. ஆர் ஜயவர்த்தனவும்.

சென்ற வாரம் பாராளுமன்றத்தில் பேசும் போது திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன 'ஒப்சேவர்' பத்திரிகையைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அது அவர்களுடைய பத்திரிகை" என்று குறிப்பிட்டார். அவர் அப்படிக் குறிப்பிட்டதன் காரணம் என்ன?

### சதி மசோதாவும் விஜயபாகு விஜயசிங்காவும்.

மீரிகமைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரான திரு. விஜயபாகு விஜயசிங்கா அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்தான். ஆனல் சென்றவாரம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய 'புரட்சிச் சதி மசோத'வை அவர் ஆதரித்து வாக்களித்தபோது அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மற்றைய அங்கத்தவர்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அந்தச் செய்கை அவருக்கு மனச்சஞ்சலத்தையும் கவலையையும் அளிப்பதாக இருந்தது. அவர் மிகவும் துக்கப்படுபவர் போல் காணப்பட்டார்.

### நடிகர் இலங்கரத்தின!

பிரபல சிங்கள எழுத்தாளர் ஒருவரோடு பேசிக்கொண்டிந்தபோது பல சுவையான சம்பவங்கள் தெரிய வந்தன. நம்முடைய மந்திரி திரு. ரி. பி இலங்கரத்தின இருக்கிருரே, இவர் சிங்களத்தில் ஒரு பிரபல எழுத்தாளராவர். ஏராளமான நாவல்களும் சிறுகதைகளும் எழுதியிருக்கிருர். அது மட்டுமல்ல, சமீபத்தில் வெளியான ஒரு சிங்கள சினிமாப்படத்தில் ஓர் உப பாத்திரத்தில் இவர் நடித்தும் இருக்கிருர்.

இந்தச் சம்பவங்களை நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த இன்னெரு நண்பர் "உதெல்லாம் என்ன நடிப்பு, அவர் பீலிக்ஸ் டயஸுக்கு முன்னலும், சி. பி. டி. சில்வாவுக்கு முன்னலும் நடிப்பதைப் பார்க்கவேண்டும்! அதுவல்லவோ நடிப்பு!!" என்று கூறினர். இப்படிக் கூறிய நண்பர் பல பெரிய இடங்களில் நுழைந்து நடித்து வருபவர். அவரை நம்பத்தான் வேண்டும்!

### பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் எட்டுக்கிரகமும்:

மிகப் பெரும் அறிஞர்கள் என்று கருதப் படுகின்ற பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலர்கூட சோதிட நம்பிக்கைகளுக்கு ஏற்பத்தான் வாழ்ந்து வருகின்ருர்கள் என்ற விஷயம் நேயர்கள் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனல் உண்மை இதுதான்.

சென்ற பிப்பிரவரி 3-ம் தேதி நடைபெறவிருந்த இலங்கைப் பல்கலைக் கழகச் செனட்சபைக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. காரணம் என்ன தெரியுமா? எட்டுக் கிரக சேர்க்கை நிகழும் அன்றைய தினத்தில் நம்முடைய பேராசிரியர்கள் வேறிடங்கள் எங்கும் போகவிரும்பாமல் மனைவி மக்களோடு தங்கள் தங்கள் வீட்டிலேயே இருக்க விரும்பியதுதான்!

### போக்குவரத்துச் சபைச் செய்தி.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஆலோசனை கூறுவதற்காக பல இடங்களில் ஆலோசனைச் சபைகள் இருக்கின்றன. இந்தச் சபைகளில், உரிய விதிகளின் பிரகாரம், பஸ் பிரயாணிகளும், பஸ் தொழிலாளர்களும் அங்கம் வகிக்கவேணடும். இப்படியான ஒரு சபை கண்டியிலும் உண்டு. இதற்குத் தலைவராக இருப்பவர் கண்டி அரசாங்க அதிபராகும். கண்டி ஆலோசனைச் சபையில் உள்ள பெரும்பாலான அங்கத்தவர்கள் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்தான். சமீபத்தில் சில தொழிலாளர்கள் இந்த ஆலோசனைச் சபையில் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். கண்டிப் பிராந்தியத்தில் சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கங்களை அமைப்பதில் முன்னணியில் நிற்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள்தான். இவர்களுக்குத்தான் இந்தச் சபையில் இடம் கிடைத்திருக்கிறது. பொதுமக்கள் சிலருக்கும் கூட இந்தச் சபையில் இடம் கிடைத்திருக்கிறது. அவர்கள் 'பஸ்'ஸை எட்டியும் பாராது, மோட்டர் கார்களில் பவனி வந்துகொண்டிருக்கும்பெரியமனிதர்களாகும்!

### 'கனவான் தன்மை'யைச் சோதிக்க ஒருவழி.

உங்களுடைய 'கனவான் தன்மை'யைச்சோதிக்க ஒரு வழி உண்டு. தேர்தலில் போட்டியிட்டு எப்படியாவது யாழ்ப்பாணம் மாநகரசபைக்குப் போய்ச் சேருங்கள். அங்கே உங்களை 'உரைத்து'ப் பார்த்து உங்களுடைய பெறுமதியைச் சொல்லிவிடுவார்கள்!

### இப்படிச் செய்யலாமோ!

"பொன்னை இழக்கலாம்—பின்னர் ஈட்டிக் கொள்ளும் நம்பிக்கையில்! ஆனல் கண்ணை இழக்கலாமோ..?"

—கூடாதென்றுதான் நீங்கள் சொல்வீர்கள் ஆனல் நம்முடைய தலைப்பட்டினத்தில் உள்ள பெரியமனிதர்கள் சிலர் இப்படிச் செய்கிருர்கள். அவர்களை நான் என்ன பெயரைச் சொல்லி அழைக்கட்டும்?

—'அம்பலத்துறைவோன்'

● கல்கி ● நகைச்சுவை எழுத்தாளர் ● இளம் பெண்கள் ● 'டூப்' அடிப்பவர் ● சிவாஜி கணேசன் ● அறிஞர் அண்ணு ● ஹிட்லர் மீசை ● திட்டும்ஆண் ● என் மனைவி ● ரமணன் டைரக்டர் ● துரத்தும் காதலர்கள்.

# கேள்வி-பதில்!

ரமணன்

செல்வி பத்மாசனி செல்வநாயகம்
யாழ்ப்பாணம்.

கே:-ஏன் கல்கியை 'போர்' அடிக்கும் பத்திகை என்று கூறுகிறீர்கள்?

ப: காங்கிரசைத்திட்டுவதையல்லவா கல்கி ஓர்சாதனையாக எண்ணுகிறதுகதைகளில்கூட காங்கிரசை திட்டுகிருர்களே! காங்கிரசிலே குற்றம் குறையிருக்கலாம். அதைநான் இல்லையென்று சொல்லவில்லை! ஆனுல் திட்டுவதற்க்கும் குறை கூறுவதற்குமிடையில் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது!

க. ஆறுமுகம் -கல்முனை

கே:-ஈழத்து நகைச்சுவை எழுத்தாளர்கள் மூவரைக் கூறுங்கள் பார்க்கலாம்!

ப:-ரீ.பாக்கியநாயகம், மாஸ்டர் சிவலிங்கம், துருவன்.

இ கதிர்காமு
வேலணைகிழக்கு

கே- எதற்காக பெண்களின் படம் புதினத்தின் முதலட்டையில் எப்பொழுதும் வருகிறது?

ப.- புத்தரக்கித்தா, அமிர்தலிங்கம், கென்னடி, எம். ஜி. ஆர் இவர்களெல்லாம் பெண்களென்ரு நினைக்கிறீர்?

நவாலியூர்.
த. பரமலிங்கம்.

கே:-இளம் பெண்கள் தங்கள் தங்கள் வீட்டுப் படலையில் எந்நேரமும் நிற்பதேன்?

ப:-இளம் ஆண்கள் தங்கள் தங்கள் வீட்டுப் படலையில் எந்நேரமும் நிற்கிருர்களா எனப் பார்ப்பதற்கு!

கே:-ஏமாற்றுபவர்களை என்ன வென அழைக்கலாம்?

ப:- உமது பெயரைக் கூறி அழைக்கலாமே! என்னையா 'டூப்'பா அடிக்கிறீர்கள்? நீங்கள் நவாலியூர் த பரமலிங்கமென எழுதி இவ்வளவு காலமும் அடைப்பன் வீதி' குருநகர் என விலாசம் கெடுத்திருந்தீர்கள்! ஆனுலிப்போது தங்களது 'விலாசம் ஜம்பட்டா ஸ்றீட்' கொழும்பு 13க்கு மாறிவிட்டது. ஆனுல் தங்களது அஞ்சலட்டையிலேயோ யாழ்ப்பாணம் தபால் நிலையத்தின் 'ஸீல்' குத்தப்பட்டுள்ளது. விசாரித்துப் பார்க்கும் பொழுது தங்களது பெயருடன் மேற்கொண்ட விலாசத்தில் ஒருவரும் இல்லையாம். நீங்கள் யாரையும் ஏமாற்றலாம்! ஆனுல் என்னைமட்டும் ஏமாற்ற முடியாது!

கே:- ஒரே கேள்வி!...... ஒரே கேள்வி!...''' ஒரே கேள்வி!... எந்தன் நெஞ்சிலே!......

ப:- ஒரே பதில்!...... ஒரே பதில்!...... ஒரே பதில்! ...... எந்தன் நெஞ்சிலே!......

அ ராமலிங்கம்
லுணுகலை.

கே.- கடந்த காலத்திற்குத் தொப்பியைக்கழற்று. எதிகாலத்திற்கு கோட்டைக் கழற்று என்ற அமெரிக்கப் பழமொழியின் கருத்தென்ன?

ப:- ''கடந்த காலத்துக்கு மரியாதை செய்.எதிர் காலத்துடன் போராட ஆயத்தமாயிரு என்பதே!

எம்.ஜுனைத்நீன் பதுளை

கே:- சிவாஜிகணேசன் நடித்த படங்களில் தங்கள் உள்ளத்தைக் கவர்ந்ததெது?

ப:- பாசமலர்

இ. பாரதிநேசன்,
மாவிட்டபுரம்.

கே.- அறிஞர் அண்ணுவிற்கும் இங்கர்சாலுக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப:- இருவரிடமும் ஒரேயளவு சக்தியிருந்தும் இங்கர்சால் தனது சக்தியை சரியாகப்பயன் படுத்தினுர். அண்ணு அரசியல் சேற்றில் தன்சக்தியை எல்லாம் புதைத்துவிட்டார்

நாகூர். ஏ. பவான்,
காத்தான்குடி

கே:- திப்பொறியின் 'ஹிட்லர் மீசை' இந்தநாட்டுக்குச் சொந்தமானதா? இவ்வுலகிலதை இனிமேலும் விட்டு வைக்கலாமா?

ப:- ஹிட்லர் மீசையினுள் புகுந்திருப்பவர் ஈழத்தின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். பிரபலமானவரும் கூட!அது சரி உங்கள் கேள்வியைப் பார்த்தால்ஏதோ ஹிட்லர் மீசையை இவ்வுலகிலிருந்தேயனுப்ப ஆயத்தமாக இருக்கிறீர்கள்போலிருக்கிறதே!

இ ஐயாத்துரை
கிளிநொச்சி

கே:- தங்களது பத்திரிகைக்குக் கதை கட்டுரையனுப்பினுல் பிரசுரிப்பீர்களா?

ப:-ஓ....... தாராளமாக!புதினம் தரமான, சுவையான விஷயங்களை எப்பொழுதும் வரவேற்கிறது

ஐ. மார்க்ண்டன்,
ஊர்காவற்றுறை.

கே;- 'தோட்டக்காரி' எப்பொழுது வெளிவரும்?

ப:-தயாரித்து முடிந்தவுடன் வெளிவரும்.

ஜே தி, மாத்தன்னை.

கே:- என்னை ஒரு ஆள் எப்பொழுதும் திட்டிக் கொண்டேயிருக்கிருர்! நான் என்ன செய்வது?

ப:- நீங்கள் ஒன்றும் கூருதிருங்கள். அவரது திட்டல்சிறிது ஓய்ந்து விடும்! இரண்டுகைகளும் முட்டினுல் தானே சத்த முண்டாகிறது? அச்சத்தத்தைக் கேட்டுத்தான் யாராவது திரும்பிப்பார்ப்பார்கள். ஒரு கை மோதப்போகாமலிருந்தால் எந்தச்சத்தமும் உண்டாகாது. ஒரு கையைஎப்பொழுது விசுக்கிக் கொண்டிருப்பவன் கன்னத்தில் அவனுக்குப் 'பைத்தியமோ'என மற்றவர்களும் விசுக்கத் தொடங்கிவிடுவார்கள்.

> **பரிசுக் கேள்வி.**
>
> சி. கந்தசாமி,
> கந்தரோடை,
> சுன்னுகம்.
>
> கே:- கட்சிவிட்டுக்கட்சிமாறும்பாராளுமன்றஅபேட்சகர்களைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?
>
> ப:-வாழத் தெரிந்தவர்கள்.

எல். விஜயராகவன்,
கோப்பாய்,

கே:- நான் கதாநாயகனுக நடிக்க நீங்கள் அதைடைரக்ட் செய்ய ஒரு படம் வெளிவந்தால்.........

ப:- ரசிகர்களின் ஆத்திரத்திரத்தினுல் படம் திரையிடப்படும் அத்தனை தியேட்டர்களும் இடித்துக் கொட்டப்படும்

சு. சுப்பிரமனியம்,
காரைநகர்

கே;- தமிழ்படங்களில் காதலர்கள் ஓடுகிருர்களே, ஏன் இந்த ஓட்டம்?

ப:-படம் விரைவில்தியேட்டரை விட்டு ஓடவேண்டாமா?

செழியன் ஜே. பேரின்பநாயகர், மட்டக்களப்பு.

கே;-தமிழ்நாட்டிலிடம் பெறவிருக்கும் தேர்தலில் முக்கியமாகத் தங்களைக்கவர்ந்த அம்சம் எது?

ப.- அவர்கள் கதைக்காத 'டமில்!'

பொ. பரராஜசிங்கம், சங்கானை

கே:- நான் என் கையில் இனிப்புப் பண்டத்தை வைத்துக் கொண்டு 'தம்பி' என்று கூப்பிட்டால், தங்கைதானே ஓடிவருகிருள். என்ன செய்யலாம்?

ப:- தங்கையை அழைத்துப் பாரும் ஒருவேளை தப்பி ஓடி வருவான்!

கே. வெற்றிவேலு,
கொழும்பு.

கே: ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால்?

ப: இரண்டல்ல; இருபதும் ஆகலாம்!

## யாகம் செய்வது முட்டாள்தனம்!

# நேரு சொல்கிருர்!

## 'நெய் வீணுகிறது' என்று நையாண்டி செய்கிருர்!

எட்டுக்கிரக சேர்க்கையின் அபாயத்துக்குப் பயந்து மக்கள் யாகங்களை நடத்துவது படு முட்டாள்தனத்தின் அறிகுறியாகும் என்று பாரதப் பிரதமர் நேரு வர்ணித்துள்ளார்.

போபாவிலிருந்து 41 மைல் தூரத்திலுள்ள விதிஷா என்னும் இடத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது பாரதப் பிரதமர் கீழ்க்கண்டவாறு கூறினுர்.

''இந்த யாகங்களை நடத்துவதால் இந்தியா உலகில் நகைப்புக்கிடமாகிவிட்டது. மக்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்வது எவ்வளவு அவசியமாகும் என்பதை இது காட்டுகிறது.

அஷ்ட கிரகத்தின் தியவிளைவுகளைத் தவிர்க்கும் நம்பிக்கையில் இப் பகுதியில் சிலர் பஜனைகளையும் யாகங்களையும் நடத்தியதாகக் கேள்விப்பட்டேன்.

பஜனைகளையும் பிராத்தனைகளையும் நாம் ஆட்சேபிக்கவில்லை. மக்களுக்குப் போதிய நெய் இல்லாதபோது ஏராளமான நெய்யை உபயோகித்து யாகங்களை நடத்துவது வீணை செயலாகும்.

அஷ்ட கிரகத்தினுல் நான் பாதிக்கப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அச்சமயத்தில் தேர்தல் சுற்றுப் பிரயாணத்துக்காக விமானத்தில் நான் பறந்து கொண்டிருந்தேன். உயரத்தில் பறந்த போது கிரகங்கள் அருகில் இருப்பதால் நான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் பாதகம்ஏதும் இல்லை. இந்த அஷ்ட கிரக சேர்க்கை பெரும் கேலிக் கூத்தாகிவிட்டது. உலகம் முழுவதும் நம்மைக் கண்டு நகைக்கிறது

பல லட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள கிரகங்களின் தன்மையை யாகம் நடத்துவதன் மூலம் எவ்வாறு மாற்ற முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. நமது கலாசாரத்தின் உயர்ந்தவைகளை இத்தகைய விஷயம் இழிவு படுத்துகிறது. இது நமது மக்களின் பிற்பட்ட தன்மையைக் காட்டுகிறது.

மக்கள்மனதில்அச்சத்தை உண்டாக்குவது அனைத்தும் தீங்கானது. வேலையை நிறுத்தி விட்டில் மறைந்து கொள்வது ஏன்? பிரார்த்தனைகள் மூலம் பாலம் கட்ட முடியாது அல்லதுநிலத்தை ஆழ உழ முடியாது'' என்ருர் நேருஜி.

# யானைக் குட்டியின் சத்தியாக்கிரகம்!

கேரள அரசினர் எப்போதுமே யானைக்குட்டிகளை மதிப்புள்ள வெகுமதியாக வரவேற்பர். ஆனுல் சிறிது நாட்களாக கேரள அரசாங்கத்துக்கு ஒரு யானைக்குட்டி பெரும் சுமையாகவே உள்ளது. ஏன்? வன இலாகா அதிகாரிகளுக்கு தலைவலியையே இந்தக் குட்டியானை உண்டாக்கியுள்ளது.

30 அங்குல உயரமுள்ள இந்தயானை வடக்கு கேரளாவில் ரிசர்வ் காட்டில் சுல்தான் வட்டாரியருகே சென்ற 27 ம் தேதியன்று பிடிக்கப் பட்டதாம்.

உண்மையில் அந்த யானையைப் பிடித்ததில் அதிகாரிகள் மிகவும் மகிழ்ச்சிகொண்டனர். ஆனுல் அம்மகிழ்ச்சி சிறிது நாட்கள்கூட நிலைத்திருக்கவில்லை.

அது சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கி விட்டது. தாய்ப்பாலைத் தவிர வேறு எதையும் அந்த யானை உண்ணவில்லை. அதன் தாயைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. வேறு வழியின்றி கண்கலங்க அக் குட்டியானையை வனத்திற்குள்ளேயே விட்டு விட்டனர் அதிகாரிகள்

ஆச்சரியமளிக்கக் கூடிய வகையில் இந்த யானைக்குட்டி மீண்டும் அதிகாரியிடமே திரும்பி வந்துவிட்டது. சமீபசில நாட்களாக அது எதையுமே சாப்பிடவில்லை. பழக்கப்பட்ட யானையைக் கொண்டு பால் கொடுக்கச் செய்வோமென்று முயன்ருலும், அது சாத்தியப்படவில்லைஅதன் தாய்ஏதோ விபத்தில் சிக்கியிருக்கக் கூடுமெனக்கருதப்படுகிறது.கேரள அரசாங்கத்துக்குத் தலைவலி தான்!

# அறுபது லட்சம் பேரைக் கொன்று குவித்த அடல்ப் ஈச்மன்!

—ஜோ. ஏ. எம். தாஸ்—

"நான் ஒரு கல் மனம் படைத்தவன் அல்லன் ....! இன்று, இரத்தம் வடியும் ஒரு சிறு புண்ணுடன் ஒரு மனிதனைக்கண்டால், என் மனம் தாங்காது! அதைப்பார்ப்பதற்கே என் கண்கள் கூசும். இதன் காரணமாக நான் ஒரு டாக்டராக இருப்பதற்குக் கூட லாயக்கற்றவன்... ... என் வாழ்வைப்பற்றி நான் கவலைப்படவில்லை பொதுமக்களின் பார்வையில் நான் தூக்குத் தண்டனை அனுபவிப்பதை வரவேற்கின்றேன்!

நான் மரணத்தின் வாயிலை எதிர்நோக்கிப்போய்க்கொண்டிருக்கின்றேன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், நான் அதற்காகக் கொஞ்சமேனும் கவலைப்படவில்லை! ... ... ..."

கடந்த வருடம் ஏப்பிரல் மாதம் 19-ம் திகதியன்று, இஸ்ரேல் நீதிமன்றத்தில் அடல்ப் ஈச்மன் மேற்கண்டவாறு கூறினான். இந்த அடல்ப் ஈச்மன் யார் தெரியுமா? ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்த கொலைகாரன்தான் இவன்!

இன்று, "... ஒருசொட்டுஇரத்தத்தைக் கண்ணால் காண்பதற்குக் கூட என் மனம் தாங்காது! ..." என்று சொல்லும் அதே அடல்ப் ஈச்மன்தான், 1942-ம் ஆண்டு "என்னுடைய தொழில் முடியும்போது, யூத இனத்தின் ஒரு பூண்டு கூட உயிருடன் இருக்காது!........அந்த இனத்தையே ஒழித்துக் கட்டுவேன்! என்று வெற்றிப்பெருமிதத்துடன் கொக்கரித்தான்!

ஆனால்—

காலம் மாறியது! எந்த இனத்தவர்களை அவன் அடியோடு வெறுத்தானோ, எந்த இனத்தை அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும் என்று திடசங்கல்பம் செய்துகொண்டு, முழுமூச்சுடன் முயன்றானோ அதே யூத இனத்தவர்களால் பதினைந்து ஆண்டுகள் அயராது முயற்சி செய்து, கைது செய்யப்பட்டான்!

தம் இனத்தைக் கொன்று குவித்த அடல்ப் ஈச்மனைக் கைது செய்து பழிவாங்க வேண்டுமென்று இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் பட்ட சிரமமும்; அனுபவித்த கஷ்டங்களும்; கடைசியில் ஈச்மனைக் கைது செய்த விதமும் சுவாரஸ்யமானது மட்டுமல்ல, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட!

இரத்தவெறியையும், அசுரத்தன்மையையுமே குறிக்கோளாகக் கொண்டு, கொடுங்கோன்மை ஆட்சி நடத்தி, உலக அழிவுக்கு வித்திடுகிறோம் என்று அறிந்தும் கூட கடைசி மூச்சுவரை பயங்கர யுத்தம் நடத்தினான் ஹிட்லர்!

இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானது! ஹிட்லரின் அரசாங்கத்தில் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிர்வாகப் பகுதியின் தலைவனாகப் பொறுப்பேற்றிருந்தான் ஈச்மன். யூத குலத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற பொறுப்பு ஈச்மன் தலைமை வகித்த அந்தக் குறிப்பிட்ட பகுதியிடமே ஒப்படைக்கப் பட்டிருந்தது. தான் தான் அந்தப் பகுதியின் தலைவன் என்ற காரணத்தால், ஈச்மன் யூதர்களின் பிரச்சினைக்கு முடிவு காண முனைந்தான். யூதஇனத்தின் உயிர் ஒன்று இருந்தாலும், அந்தப் பிரச்சினையை முற்றாகத் தீர்க்க முடியாது என எண்ணிய அவன், அந்த இனத்தைப் பூண்டோடு ஒழித்துக்கட்ட வேண்டும் என்று உறுதி பூண்டுவிட்டான்! பணபலமும், அதிகார வன்மையும், ஆணவமும் அவனுக்குத் துணையாக இருந்தன.

ஒருதினம்—

அவன் திட்டமிட்ட காரியத்தைச் செய்கையில் காட்ட முனைந்து விட்டான் அன்று முதல் ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர் உட்பட யூதர்கள் அனைவருக்கும் அடி உதை மட்டுமல்ல, உலகத்தில் இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் உண்டோ, அத்தனையையும் தயக்கமின்றிச் செய்தான் அடல்ப் ஈச்மன்.

நச்சுப் புகை அடைத்த குகைகளுக்குள் யூதமக்களைப் பிடித்துச் சாகும்வரை அடைத்து வைத்திருக்குமாறு கட்டளையிட்டான். பல்லாயிரக் கணக்கான யூதர்களை— பச்சிளம் குளந்தைகள் என்றுகூடப் பாராமல், உயிரோடு குழி தோண்டிப் புதைக்கச் செய்தான்! இன்னும் எண்ணற்றவர்கள் உண்பதற்கு உணவின்றி, தாகம் தீர்க்கத் தண்ணீர் இன்றி அணு அணுவாகச் சித்திரவதை செய்யப்பட்டு, பட்டினியாலும், தாகத்தாலும் ஈக்களைப்போல் மாண்டார்கள்!

பல ஆயிரக்கணக்கான மக்களை வரிசையாக நிற்கவைத்து, துப்பாக்கியால் பறவைகளைப்போல் சுட்டும்; கத்தியாலும், வாளினாலும் மிருகங்களை வெட்டுவதைப்போல் வெட்டியும் கொலை செய்தார்கள்! இன்னும் பல யூதமக்களைக் குழந்தை குட்டிகளுடன் பாரமான பொருட்களை அவர்கள்மேல் சுமத்திக் களைக்கக் களைக்க நடக்கவைத்து, வழியில் இன்னல்கள் பல அனுபவிக்கச் செய்து, அவர்களை ஆக்கினைப் படுத்தினார்கள்!

இன்னும்—

எழுதுவதற்கே கை நடுங்குகிறது! அத்தனை கொடுமை!...

பல்லாயிரக்கணக்கான யூத அழகிகள், நடுத்தெருவில் துகிலுரிந்து கற்பழிக்கப் பட்டார்கள் என்றால், இதைவிடக் கொடுமை வேறு என்ன இருக்கிறது?

இத்தனை அட்டகாசங்களும் நடைபெறுவதற்கு மூல காரணமாக இருந்தவன்தான் அடலப் ஈச்மன்!

ஆனால்—

காலம் மாறியது! இரண்டு மூன்று ஆண்டுகளில் நிலைமை முற்றாக மாறுபட்டது. யுத்தத்தில் ஹிட்லர் ஒழிந்தான். ஜெர்மனியும் வீழ்ந்தது. ஹிட்லரின் கொடுங்கோன்மை ஆட்சியில் அதிகாரிகளாகப் பவனி வந்தவர்கள், தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடி ஒளிந்தனர் அவர்களுள் ஒருவன்தான் 6,000,000 யூதமக்களைக் கொலைசெய்த அடலப் ஈச்மன்!

தப்பி ஓடிய அடலப் ஈச்மன் பல ஆண்டு காலமாகத் தலைமறைவாகத் திரிந்தான். 1945-ம் ஆண்டு மே மாதம் ஒரு தினம் அமெரிக்க வீரர்களின் கண்களில் பட்டான் ஈச்மன். ஆனால், அவனை ஒருவராலும் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. இறந்துபோன ஒரு படைத் தளபதியின் உடையை அணிந்துகொண்டு அந்தத் தளபதியின் அடையாளச் சீட்டையும் வைத்துக் கொண்டு, ஏமாற்றிய குற்றத்திற்காக ஈச்மனைக் கைது செய்து, மற்றக் குற்றவாளிகளுடன் யுத்த கைதியாக அடைத்து வைத்தார்கள். ஆனால், அவர்கள் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டுச் சிறைக்கூடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டான் ஈச்மன்!

தப்பி ஓடித் தலைமறைவாகத் திரியும் யுத்தக் குற்றவாளிகளின் பட்டியலில் அடல்ப் ஈச்மன் என்ற பெயர்தான் முதன் முதலாக இருந்தது! பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகள் ஈச்மனைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டன. ஆரம்பத்தில் சற்றுச் சுறுசுறுப்பாக முயற்சிசெய்தாலும் அந்த முயற்சி பலனளிக்காமல் போகவே, நாளடைவில் அந்த முயற்சியை முற்றாகவே கைவிட்டு விட்டன, அந்த நாடுகள்.

ஆனால்—

யூதமக்களோ, தங்கள் இனத்தின் ஜென்ம விரோதியான அடல்ப் ஈச்மனைக் கனவிலும் மறக்கவில்லை! அவர்களால் எப்படி மறக்கமுடியும்? ஈச்மன் சாகாமல் உயிருடன் இருந்தால் அவனை எப்படியாவது கண்டு பிடித்தே தீரவேண்டும் என உறுதி பூண்டனர். இதன் காரணமாக உலகின் பல பாகங்களிலும் இஸ்ரேல் துப்பறியும் நிபுணர்கள் உலாவிக்கொண்டிருந்தார்கள்!

(தொடரும்)

## இலங்கையிலிருந்து தரைமார்க்கமாக
# மெக்காவுக்கு யாத்திரை!
## 52 பூனைகளுக்கும் 'ஹாஜி' பட்டம்!

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள நாற்பது பேர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று கடந்த 10-2-62அன்று இலங்கையிலிருந்து தரைமார்க்கமாக ஹஜ்ஜுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. இலங்கையிலிருந்து இது நாள் வரையிலும் எவராலும் மேற்கொள்ளப்படாத தரைமார்க்க ஹஜ்ஜுப் பயணத்தை இலங்கை தப்லீக் ஜமா அத்தார் இவ்வருடம் மேற்கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது! இவர்கள் மக்காவுக்குச் சென்று திரும்பியவுடன் 'ஹாஜியார்' என்ற பட்டம் சூட்டப்படுவர்.

அதே நேரத்தில் எகிப்திலுள்ள அலக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த 52 பூனைகளும் வழக்கம்போல் இவ்வருடமும் 'ஹாஜி' பட்டத்தைப் பெற்றுக் கொள்ளவிருக்கின்றன!

1813-ம் ஆண்டு அலெக்ஸாண்டிரியாவிலுள்ள செல்வம் படைத்த ஒரு முஸ்லிம் விதவை மரணமானாள். அவள் இறப்பதற்கு முன் ஒரு விசித்திரமான நிபந்தனையுடன் தன் சொத்தையெல்லாம் ஒரு தர்ம ஸ்தாபனத்திற்கு எழுதிவைத்தாள். ஒவ்வொரு வருடமும் 52 பூனைகளை மெக்காவுக்கு யாத்திரை கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்பதே அவள் விதித்த விசித்திர நிபந்தனை. மெக்கா இஸ்லாமியரின் புனிதமான யாத்திரைஸ்தலம். பூனைகள் அங்கு போவதால் என்ன பயனடையுமென்று அவள் எண்ணினாளோ தெரியவில்லை!

அவளுடைய வேண்டுகோளின்படியே ஒவ்வொரு வருடமும் ஒரு முஸ்லிம் பெரியார் ஒட்டகத்தின் மீது 52 பூனைகளையும் ஏற்றிக்கொண்டு மெக்காவுக்கு யாத்திரை செல்கிறார். யாத்திரை போய் வந்ததும் அந்த 52 பூனைகளுக்கும் 'ஹாஜி' என்ற பட்டம் வழங்கப்படுகிறது இவ்வருடமும் 52 பூனைகள் அலெக்ஸாண்டிரியாவிலிருந்து மெக்காவுக்கு யாத்திரை போயிருக்கின்றனவாம்!

சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
**வீரிய விர்த்தி மாத்திரை**
மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்பபன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
**லேபனம் மெழுகு**
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)


## யார் இந்த வைஜயந்தி?

'புலி எட்டடி பாய்ந்தால், குட்டி பத்தடி பாயும்!' என்பது ஒரு பழமொழி. இதற்கு இலக்கணம் வகுத்தாற்போல் ஒரு காலத்தில் திரைப்பட உலகில் புகழ்பெற்றுத் திகழ்ந்த வசுந்தரா தேவிக்கு மகளாகப் பிறந்த வைஜந்திமாலா, அகில இந்தியப் புகழ்பெற்று, இன்று உலகம் போற்றும் சிறந்த நடிகையாகத்திகழ்வதில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

தமிழ்நாட்டின் 'மர்லின் மன்றோ' என அழைக்கப்படும் இவர் வாழ்க்கைஎன்றபடத்தின்மூலம் திரைஉலகுக்குஅறிமுகமானார். அன்றுமுதல் இன்றுவரை ரசிகர்களின் அன்புக்குப் பாத்திரமாகி, திரைத்தாரகையாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றார்!

தென்னகத்தின் சிறந்த நடனநடிகையான இவர், "ஆண்டாள் திருப்பாவை" என்ற நாட்டிய காவியத்தை நாடெங்கும் நடத்திவருகிறார். 'மாலா' என்ற பத்திரிகையின் வெளியீட்டு ஆசிரியையுமாக இருக்கிறார் இவர். பல படங்களில் நடித்துப் புகழ் பெற்றாலும், தனக்குப் பிற்கால வாரிசாகப் பலபெண்களுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்துக் கொண்டு வருகிறார் இந்த நடனராணி!

## "பாட்டுப் பாடவா... பார்த்துப் பேசவா..."



'தேன் நிலவு' படத்தில் வைஜயந்திமாலாவும், ஜெமினி கணேசனும்.

## "கலைவளர, கலைஞன் வளரவேண்டும்!"

### நடிகை லட்சுமி ராஜம் கூறுகிறார்!

'ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகையான பஞ்சம் வருவதும் போவதும் உண்டு! இதுபோல் கலை உலகத்திலும் புதுப் பஞ்சம் வந்திருக்கிறது. இது என்ன புதுப்பஞ்சம்? நடிக நடிகையர்கள் இது உண்மையா என்றால் அதுதான் இல்லை! இதை மனப்பூர்வமாக தெளிவோடும் அளவோடும் மறுக்கிறேன். எப்படி என்று கேட்டால் இது தான் என்னுடைய பணிவான பதில்!

கலைக்கடலிலே எட்டாத ஆழத்திலே இருக்கும் சிப்பியுள் முத்தாக எத்தனையோ சிறந்த கலை முத்துக்கள் இருக்கின்றன. இவைகளைத் துணிவோடு கரைக்குக் கொண்டுவர அறிவும் ஆற்றலும் மிக்க படமுதலாளிகள் இருந்தும் துணிவின்றி இருக்கின்றனர் என்றால் இதன் உட்பொருள் என்ன? ஊக்கமும் உற்சாகமும் ஆதரவும் கொடுக்காமல் இருக்கும் கலை விரும்பிகளாகிய நீங்கள் தான் பொறுப்பாளி. கலை வளர வேண்டுமானால் கலைஞர்கள் வளர வேண்டும். கலைஞன் வளர வேண்டுமானால் கலை உள்ளம் மலரவேண்டும்"

இவ்வாறு நடிகை லட்சுமி ராஜம் கூறியுள்ளார்.

## படித்தால் மட்டும் போதுமா?

ரெங்கநாதன் திரைப்பட நிறுவனத்தார் தயாரித்துவரும் படத்துக்கு 'படித்தால்மட்டும் போதுமா?' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். இந்தப் படத்தை ஏ. பீம்சிங் டைக்ட் செய்து வருகிறார்.

சிவாஜி கணேசன், ராஜாசுலோசனா, சாவித்திரி, பாலாஜி ரங்கராவ், எம். ஆர். ராதா, சகஸ்ரநாமம் ஆகியோர் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள். திரு. ஆரூர் தாஸ் கதை—வசனத்தை எழுதியிருக்கிறார்.

## சீமான் பெற்ற செல்வங்கள்!

ஆர். ஆர். சந்திரன் புதிதாக நிறுவியுள்ள பிரபு பிலிம்ஸ் என்ற படக்கம்பெனியார், தங்கள்முதல்தயாரிப்பாக 'சீமான் பெற்ற செல்வங்கள்!' என்ற படத்தை தயாரிக்கிறார்கள்.

தேவிகா, சௌகார்ஜானகி, அசோகன், கல்யாணகுமார், பாலையா ஆகியோர் நடித்து வரும் இப்படத்தை ஆர். ஆர். சந்திரன் டைரக்ட்செய்கிறார்

## அண்ணனைச் சந்திக்க தம்பிக்கு நேரமில்லை!

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்குத் தன் அண்ணன் எம். ஜி சக்கரபாணியைச் சந்திக்க நேரமில்லையாம்! இது பற்றி அவரே கூறுகிறார்:

முடியவில்லை!

"நான் இரவு வீடு திரும்பும்போது அண்ணா தூங்கிக் கொண்டிருப்பார். அதிகாலையில் நான் எழுந்து வெளியில் போகும்போது அவர் எழுந்திருக்கமாட்டார். இதனால் நாள் கணக்கில் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேச முடியவில்லை!

ஸ்டுடியோவுக்கு வா!

இதற்காக அண்ணாவிடம் சொல்லி ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறேன். படப்பிடிப்பு இடைவேளையின் போது, அண்ணாவை ஸ்டுடியோவுக்கு வரும்படிக் கேட்டுள்ளேன்!"

## சாவித்திரிக்கு ஹிந்தி பேச ஆசை!

"பாசமலர்" படத்தின் ஹிந்திப் பதிப்பான "ராக்கி" சென்னையில் படமாக்கப்பட்டது. நடிகை வஹிதா ரஹ்மான் இதில் நடிப்பதற்காக வட நாட்டிலிருந்து சென்னைக்கு வந்திருந்தார் சாவித்திரி தமிழில் நடித்துள்ள பாகத்தை அவர் ஹிந்தியில் நடித்தார்.

"ஐந்து வருடங்களுக்குப் பிறகு சென்னையில் மீண்டும் நடிக்கிறேன். தமிழில் பேசுவதற்கு ஆசைப்படுகிறேன்' என்று வஹிதா ரஹ்மான் ஆவலுடன் கூறினார். ஆனால், சாவித்திரியோ, "உங்களோடு நான் ஹிந்தியில்தான் பேசுவேன். அதுதான் எனக்கு ஆசை" என்று சொல்லி ஹிந்தியிலேயே பேசித் தீர்த்துவிட்டார்!

## எம். ஜி. ஆரின் காதலி ஈ. வி. சரோஜா

எம். ஜி. ராமச்சந்திரனுடன் முதன் முறையாகக் காதலியாக நடிக்கவிருக்கிறார் நடன அழகி ஈ. வி சரோஜா.

ஈ. வி. ஆர் பிக்சர்சாரின் தமிழ்ப்படத்தில் எம். ஆர் ராதா, நம்பியார், தங்கவேலு ராஜசுலோசனா, லட்சுமி பிரபா முதலியோர் நடிக்கின்றனர், டைரக்டர் ப. நீலகண்டன் இப்படத்திற்கு வசனம் எழுதுகிறார் அவரே டைரக் செய்வார் இசையமைப்பு கே. வி. மகாதேவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது!

என்று பிரபல தென் இந்திய திரைப்பட நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்கூறினார்.

## 'பருவப் பெண்ணைப் பார்த்து'

### கண்ணதாசன் பாட்டு!

காலஞ்சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திற்குப் பிறகு, இப்பொழுது எந்தப் படத்தைப் பார்தாலும் கவிஞர் கண்ணதாசனின் பாடல்களே இடம்பெறுகின்றன!

கருத்துள்ள பல இனிய பாடல்களை இயற்றி ரசிகர்களின் மத்தியில் பெரும் புகழை ஈட்டியிருக்கின்றார் கண்ணதாசன். 'வளர் பிறை' என்ற படத்திற்காகக் கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள பாடல் ஒன்று ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பெறும் என்பதில் சந்தேகமே இல்லை.

அந்தப் பாடல் இதோ—

"கலகலக்குது நாத்து;
சலசலக்குது கீத்து;
பளபளக்குது சோலை—
[எல்லாம்
பருவப்பெண்ணைப் பார்த்து!
பருவப்பெண்ணைப் பார்த்து
பாய்விரித்து நாத்து;
கறுகறுத்த கண்ணிரண்டும்
காத்திருக்குது பூத்து......"

இந்தப்பாட்டுக்கு கே. வி. மகாதேவன் இசை அமைத்திருக்கிறார். டி. எம். சௌந்திரராஜனும், பி. சுசீலாவும் இந்தப் பாடலை மிக இனிமையாகப் பாடியிருக்கிறார்கள். இந்தப் பாடலுக்கு ஏற்றவிதத்தில் சரோஜாதேவியும் சிவாஜி கணேசனும் நடிக்கும் 'வளர் பிறை' மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் வளர்ந்து கொண்டிருக்கிறது!

—பி. வி. கிரி.

## மிஸ்மதராஸ்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸார் 'மிஸ் மதராஸ்' என்ற படத்தைத் தயாரித்து வருகின்றார்கள். அண்மையில் பரணி ஸ்டுடியோவில் இந்தப் படப்பிடிப்பின் ஆரம்பவிழா நடந்தது. டைரக்டர் பீம்சிங் கேமராவைஇயக்கிவைத்தார்.

'மிஸ் மதராஸி'ல் எம் ஆர். ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன், ராஜசுலோசனா, எம். வி. ராஜம்மா ஆகியோர் நடித்து வருகின்றார்கள்.

கதை வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை கே. எஸ். கோபாலகிஷ்ணன் மேற்கொண்டுள்ளார். கண்ணதாசன் இயற்றிய பாடல்களுக்கு, விஸ்வநாதன் ராமமூர்த்தி இசை அமைக்கின்றனர்.

## என் கணவர் இப்படித்தான் இருக்கவேண்டும்!

"எனக்கு வரப்போகும் கணவர், என் மனதுக்குப் பிடித்தவராய்இருக்கவேண்டும்! சாதி, மதம் மொழி, இனம் இவற்றை நான்பார்க்கவில்லை. என் மனதைக் கொள்ளை கொள்பவராக எவர் இருக்கிறாரோ, அவரையே நான் மணாளனாக ஏற்றுக்கொள்வேன்! அதே நேரத்தில் அவருடைய குணங்களையும் கவனித்துத்தான் அவரை நான் ஏற்றுக்கொள்வேன். எனக்கு வரப்போகும் கணவர் மிகமிக நல்லவராகவும், அழகானவராகவும் இருக்கவேண்டும் என்பதே என் ஆவல். ... ... பொதுவாகவே எல்லாப் பெண்களுக்கும் உள்ள ஆசை தானே இது?" என்று நடிகை தேவிகா கூறினார்!

சிறு கதை

இளம் உள்ளங்களின் எண்ணத் துவியல்களைக் கற்பனை செய்து பார்ப்போமானால் வெகுரசனையாக விருக்கும். எதையும் 'ஏன்?' எதற்காக? என்று துருவித்துருவி ஆராயும் சிறு உள்ளங்களைப் படம் பிடித்துப் பார்ப்பதானால் நாமும் சிறுவர்களாகிவிடவேண்டும். முதுமையடைந்த டாக்டரின் கால்களைப் பிடித்து விடுகிறாள் எட்டு வயதுச் சிறுமி.... அவள் உள்ளத்தில்பல கேள்விகள். அவள் உள்ளத்தைப் படம் பிடித்து உங்கள்முன் சமர்ப்பிக்கிறார் 'மண்ணவன்'. சமீபத்தில் யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'மண்ணவன்' இரண்டாவது பரிசு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மொட்டுக்குள்

—'மண்ணவன்'

வெய்யில்; கனல் ஆடும் வெய்யில்!

சுவரில் உலக வண்டிக்காரனின் காலடிஓசை; பதினொன்று! மடிக்கப்பட்டு வலது கை விரல்களுக்கு சுமையான அன்றைய ஆங்கில தினசரிப் பத்திரிகை வரிகளில் கண்கள் விருப்பின்றி பிரயாணம் செய்ய, அணிந்திருந்த சாறத்தை முழங்கால் சில்லுக்குமேல் இழுத்து, இருதொடைகளின் இடையில் சொருகி, கால்களை சட்டங்களில் இடக்கி வளர்த்தியவாறு டாக்டர் துரைஐயா படகுக்கெழுறு போல் சாய்வு நாற்காலிக்குள் அடங்கிக்கிடந்தார். இடது கை விரல்கள், கட்டிலின் அருகில் நின்று முகத்துக்கு தலைநீட்டும் 'அல்சேஷன்' நாயின் முகத்துக்கு, கூட்டாக இதமளித்துக் கொண்டிருந்தன.

அவர் ஒரு சிங்கப்பூர் டாக்டர். அங்கிருந்து கொண்டு வந்த பணத்தில் இங்கு 'சும்மா' வாழ்கிறார். வாழ்வில் அரைப்பங்கு அவருக்குச் சுவடாகி விட்டது. அவருக்கு இருகால்களுக்குள்ளும் முழங்காலுக்குக்கீழ் விறைத்துக் கனத்து வருவதான ஒரு பொய்யுணர்வு நரம்புவழி ஊர, வேலைக்காரி நினைவின் பொருளாகிறாள்.

"சீதை! எடி சீதை!"

சீதை அவர் வீட்டுக்கு கைப்பிள்ளை. எந்த வேலைக்கும் அவள்தான். அவள் தன் வாழ்க்கை வழியில் எட்டுமைல் கற்களைக் கடந்து விட்டவள். சமயலறைக்குள் இருந்து அம்மாவுக்கு உதவியாக வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தவளுக்கு 'ஐயா'வின் அழைப்புக்குரல் காதுக்குள் இரைந்ததும் எழுந்து உடுத்திருந்த வேட்டித் துண்டில் இருகைகளையும் துடைத்துக்கொண்டு விழுந்தோடி வந்து அவர் முன் நிற்கிறாள்.

தலையில் தலைமயிரை ஒதுக்கிக் கூட்டிக் கட்டிய சீலைக்கீலம், மயிரை அவற்றின் சுயாதீனத்துக்கு விட்டு பிடரிப்பக்கம் சிறுபிடி மயிரைச் சிறைபிடித்துக் கொண்டு தூங்குறது. மயிர் உச்சியிலிருந்து வழிந்து எட்டுத் திக்கும் விழுது இறக்கிக் கொண்டிருக்கிறது.

அவள் அவரைப் பார்க்கிறாள்.

"தொப்பை என்ன சொல்லப் போறோ"

உள்ளத்தில் அனுபவத் தாக்கல்.

தொப்பை-அவள் 'ஐயா'வுக்கு, தனக்குள் இட்டு தானே அழைக்கும் காரணப் பெயர்.

இடது உள்ளங்கையை வலது கைப் பெருவிரல் அமத்திப் பிசைகிறது.

"என்னங்கோயா!"

முன் விழுந்து கண்களுக்கு ஊஞ்சல் ஆடும் மயிரை கைவிரலால் இருகரையும் ஒதுக்கி விட்டுக் கொள்கிறாள்.

"காலைப் புடிச்சுவிடு!"

அவரின் கண்கள் தம் நிலையில் நின்று நகரவில்லை. தலைமட்டும் சரிந்து கொள்கிறது.

காலைப்பிடித்து விடு என்றதும் தன் இரு கைகளையும் கண்முன் இழுத்து விரித்தவள், 'அலுப்பின்'னால் தொடுத்திருந்த மேல் சட்டையில் மார்புப்பக்கம் உள்ளங்கைகளை இறுக்கித் தேய்த்துக் கொள்கிறாள்.

திருப்தி இல்லை, அவருடையது பவளக்கால்கள் என்ற எண்ணம்.

பின்பும் ஒருமுறை முன்னிலும் கூடிய வேகத்துடன் தேய்த்துக் கொண்டு கால் பக்கமாக வந்து நிற்கிறாள்.

உள்ளுக்குள் விளக்கமின்மை மேலிட, கண்கள் கால்களைத் தூரதிருஷ்டிப் பார்வை பார்க்கின்றன. வேலையைத் தொடங்கி, தொடர்கிறாள்.

துளிர் விரல்கள் ஒன்றுகூடி, அமத்தி காலுக்கு குளிர்மை நல்கி அசைய விரல்கள் அமத்தும் நிறைக்கேற்ப, தலை மேலும் கீழும் ஆடிக்கொள்கிறது.

ஐயாவின் பவளக்கால்கள் ஏற்றும் ஸ்பரிச மென்மை அவளின் அகக்குளத்துள் கல்வீச, எண்ணவட்டங்கள் சுழித்து விரிய ஆரம்பிக்கின்றன.

"புடிக்க புடிக்க சோக்காருக்குது; ஐஸ்கிறிம் மாரி குளிருது; எந்தப்பெரிய தொக்கைக்கால்; குட்டித்தாச்சிப் பூனை மாரி; கால் இந்தப் பெரிசென்டால் துடை எந்தப் பெரிசாருக்கும்!"

எண்ணத்தின் வழி கண்கள் இழுபடுகின்றன.

'துடையப்பார், என்ரையய்யோ எந்தப்பெரிசு; காலைப்பாக்க, வெள்ளையா இருக்கு ரோசாப் பூ மாரி'

'ஸ்...ஸ்....... தம்பளப் பூச்சியைப் புடிச்சு தடவின மாரி நல்லாருக்கு; நான் எங்கடை அப்புவுக்கும் கால் புடிச்சிருக்கிறேன் இப்படி இல்லையே? அது மெலிஞ்சகால்; அவருக்கு மாரிச்சதை இல்லை. பட்டுப் போலையும் இருக்காது?'

ஒற்றை விரலால் மயிரை மெதுவாகத் தடவுகிறாள்.

'இவற்றை மயிர் பஞ்சுபோலை இருக்கு; அது எல்லாந் தடிச்சிருக்கும்......... அப்புக்குத்தான் கூடமயிர். பொன் மாரி மினுங்கும். என்ரை மயிரைப் பாப்பம். ஆற்றை மாரி இருக்கும்?......'

ஒற்றைக்கை வேலையில் தொடர' கண்கள் கள்ளமாக ஐயாவைப் பார்த்துக் கொள்ள, மற்றக்கை தூக்கிய தன் காலை தடவி அறிகிறது.

எனக்கு நல்லா முளைக்கல்லை; எனக்கு குட்டி மயிர்; ஏன் அப்புடை மயிர் அப்புடி இருக்கு? இந்தத்தொப்பையிடை மயிர் பஞ்சுபோலை இருக்கு......ஓ...ஓ.. அப்புடித்தான் இருக்குமாக்கும். அப்பு கூலி வேலை செய்யிறவர்; சீமெந்துக்கை நிக்கிறவர்; நெடுக வெயிலுக்க தானே வேலை. அப்பு பாவம். இதென்ன செய்யுது? சனியன் காலைமை எழும்பினா இந்தக் கட்டிலுக்கைதானே கிடக்கு. சும்மா எனக்கு வேலை சொல்லத் தான் தெரியும்...........'

'சீதை இஞ்சை வாடி; அதை எடடி, இதைக் கொண்டாடி எண்டு நெடுகலும் நெடுகலும்புறுபுறுக்கும்; சனி தொப்பை!'

கைகள் வேலையில் இருக்க, தலை திரும்பி முற்றத்துக்கு முகம் கொடுக்கிறது. முற்றத்தில் ஒழுங்காக வளர்ந்து, பூக்கள் மலர்த்தி நிற்கும் பூமரங்கள் கண்ணூடாக அவளின் எண்ணத்தில் இடம் கொள்கின்றன.

'பின்னேரத்திலை இந்தப் பூக்கண்டுகளுக்கு தண்ணி ஊத்தும்; அதுதான் இதுடைவேலை. அதுவும் இந்தச் சின்னட்டி வாளியாலை'

தலைதிரும்பிக்கொள்ள கண்கள் ஐயாவின் நிலையை சோதனை செய்கின்றன. நாயின் முகத்தைத் தடவிய கைசோர்ந்து வயிற்றில் விழுந்து கிடக்கிறது. ஐயாவுக்கு குறைத் தூக்கம்.

அவளின் கைகள், ஐயா நித்திரைதானே என்னும் சிறிய துணிவுடன் கால் பெருப்பத்தை கவ்வி அளக்கின்றன.

'இவற்றை கால் சரியான தொக்கை. வலுதொக்கை, அப்புடை நல்ல மெலிசு. அதுபாவம்; ஏன் அப்புவுக்கு அப்படி இருக்கு?'

'நாங்கள் நல்லா சாப்டுறதில்லை. அப்பு நெடுகலும் சொதியுஞ் சோறுந்தானே திங்றவர். அமரிக்கன் மாப்புட்டு. இதுகள் எண்டால்! முட்டை, போத்தல் கணக்கிலை பால், சாம், பட்டர், சூப்பு, பீத்துறூட்,... கரட்,.. கட்டிலிஸ் அம்மாடியோ! இன்னும் கனக்க எனக்குப்பேர் தெரியாது. இதுகளைத் தின்னுறதாலைதான் தொக்கையா இருக்கினையாக்கும். பெரியம்மாவுந் தொக்கைதானே! அது பெரிய பூதம்!'

'எங்கடை அப்பு இதுகள் ஒண்டும் தின்னுறதில்லையே! எங்கடை அப்புவும் இதுகளைத் திண்டால் தொக்கையா வருவார்தானே'

முன்விழுந்து மூக்கை உரசிய மயிர்க் கூந்தலை. தலையைச் சிலுப்பி, பின்சரித்து, பின்னுக்கு விழுத்திவிட்ட அவளுக்கு காலின் அளவுகாணும் ஆசை அரும்ப, உடலைப் பின் இழுத்து, தலையை முன்குனித்து காலைப் பார்க்கிறாள். சதையைமெதுவாக அமர்த்திப் பார்க்கிறாள்.

"நழுநொழண்டிருக்கு; தேரையைப் புடிச்சு நசிச்சமாரி இது எங்கடை அம்மாடைகாலும் இப்படித்தான். அவசெத்துப்போனா. அம்மா இருந்தா நான் இங்க வருவனே. அவவிடமாட்டாவே. இப்ப அப்பாவுக்கு ஆர்கால் புடிப்பினம்? அவர் தான் புடிக்கவேணும்...... அது பாவம். இப்ப இந்தச் சனியன்ரை காலைப் புடிக்கிறன்..."

கைகளுக்கு கடமையில்தான் கண்.

'வயித்தைப் பாரன், குண்டான் மாரி எந்தப் பெரிசு. தம்பி அம்மாடை வயித்திலை இருக்கேக்கை இருந்த வண்டி மாரி இதுக்கையும் புள்ளை கிடக்கோ? ரண்டு மூண்டிருக்கும்...ச்சீ...சீ இவர் ஆம்புளை. என்னெண்டு புள்ளை கிடக்கும். அப்ப என்ன கிடக்கும்? சவத்தை'... சோத்தோடை கோப்பையையும் விழுங்கிட்டுதாக்கும். கல்லிலை தடக்குப் பட்டு விழுந்தா வண்டி படார் எண்டு வெடிச்சிடும்...'

[7-ம் பக்கம் பார்க்க]

## மொட்டுக்குள்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

தனக்குள் சிரிக்கிருள். 'என்ன சவமோ! நல்லாச் சப்பிட்டா இப்படித்தான் வருமோ?... சனியன் வேலே செய்தாத் தானே'

கைகள் பொத்திப் பொத்தி இதம் அளிக்கின்றன.

"சீதை! எடிசீதை! இங்க வாடிங்கை" திருமதி துரைஐயா சமயலறைக்குள் இருந்து பொறுமைஇழந்து மெல்லிய குரலில் அழைத்தது அவளுக்குக் கேட்கவில்லே.

அவளுக்கு எண்ணமெல்லாம் ஐயாவின் விநோத உடலில். குறைத் தூக்கத்தில் இருந்த ஐயாவுக்கு அம்மாவின் மெல்லியகுரல் கேட்டுவிட்டது.

"எடியே! அம்மா கூப்பிடுரு ஓடடி! செவிடுமாதிரி நிக்கிருய்"

ஒருகாலேசட்டத்திலிருந்து எடுத்துஉதறிவிட்டார்.

அவர் உதைய வேண்டும் என்று உதையவில்லே.

வயிற்றில் கால் பட்டு குத்தென விழுந்தநோவை எண்ணவும் நேரமின்றி எழுந்து விழுந்தடித்துக் கொண்டு சமயலறைக்கு ஓடுகிருள்.

"சனியன்! தொப்பை! மூதேசி!"

உதடுகள் அசைந்தன. ஒலி உள்ளேயே மறைந்துவிடுகிறது அவளேப்பொறுத்த வரையில் பெரும் மனச்சாந்தி. ஐயா உதறிய காலே இழுத்து மடக்கியபடி, உடலேத் திருப்பிச் சரித்து தூக்கத்தை நிறைவாக்க முனேந்தார்.

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**25-2-62 முதல் 3-3-62 வரை**

மேடம்: உங்கள் விஷயங்களில் முன்னேற்றங்கள் பல காணப்படும். ஆனல் திங்கள் செவ்வாய்க் கிழமைகளேயும் புதன் காலேயையும் அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்கள் மறுபடியும் நன்மை பயக்கும்.

இடபம்: உங்கள் விஷயங்களில் சில மாற்றங்கள் காணப்படுகிறது. குடும்பச்சச்சரவுகள் உண்டாகலாம் வியாழன் வெள்ளி தினங்களே அவதானமாகக் கழிக்கவும். கோபத்தை அடக்கவும்.

மிதுனம்: எதிர்பார்த்திராத விதமான முன்னேற்றங்கள் பல இவ்வாரத்தில் ஏற்படும். புதிய விஷயங்களிலீடுபடுவதால் வெற்றிகிட்டும். நண்பர்களால் பலவித உதவி உண்டு. ஆனல் தேகசுகம் சிறிது பாதிக்கப்படும். கடைசி நாளே அவதானமாகக் கழிக்கவும்.

கடகம்: குடும்ப விஷயங்கள் திருப்திகரமாக இருக்காது, மனதில் அமைத நிலவாது. புதிய விஷயங்கள் தடைப்படலாம். தேக சுகவீனமும் உண்டு. ஸ்திரீகள் மூலமாகச் சில உதவிகள் கிட்டும்.

சிங்கம்: புதிய விஷயங்களில் பல வித முன்னேற்றமுண்டு. போட்டிகளில் வெற்றியும் சத்துரு ஜயமும் உண்டு. ஆனல் சிறு குடுபபச் சச்சரவுகள் காணப்படுகின்றன

கன்னி: நீங்கள் விரும்பிய வண்ணம் கருமங்கள் செய்வது கஷ்டமாக இருக்கும். குடும்பச் சச்சரவுகளும் காணப்படுகின்றன. ஆனல் நண்பர்கள் சகாயமுண்டு. வார இறுதியில் சத்துரு ஜயமுண்டு.

துலாம்: தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. விவசாயத்திலும் லாபம் கிட்டும் அன்னியர் மூலமாகப் பலவித உதவிகள் ஏற்படும்.

விருச்சிகம்: சில நன்மையான மாற்றங்கள் ஏற்படும். நண்பர்களிடையே ஏற்பட்ட தப்பபிப்பிராயங்களும் நீங்கும். அவர்கள் உங்களுக்குப் பலவித உதவிகள் செய்வர். ஆனல் சிறிது தேகசுகக் குறைவு ஏற்படும்.

தநுசு: நண்பர்களுடனும் உறவினருடனும் விரோதங்கள் ஏற்படாது. அவதானமாக நடக்கவும். ஆனல் தொழிலேப் பொறுத்த வரையில் முன்னேற்றங்களுண்டு. பொருள் லாபமும் கிட்டும்.

மகரம்: மனதில் அமைதி நிலவாது. பிரச்சினைகளேத் தீர்ப்பது கஷ்டமாக இருக்கும் ஆனல் தொழிலில் சில முன்னேற்றம் காணப்படுகின்றது. பொருள் லாபமும் உண்டு.

கும்பம்: எதிர்ப்புகளேச் சமாளித்து முன்னேறமுடியும். உங்கள் சிக்கல்கள் பல நீங்கும். ஆனல், குடும்பச் சூழ்நிலேகள் திருப்திகரமாக இராது. தேகசுகமும் சிறிது பாதிக்கப்படும்.

மீனம்: நீங்கள் நண்பர்களிடம் முன் கிடைத்த உதவிகளே எதிர்பார்க்க முடியாது. ஆனல் தொழில் விஷயத்தில் முன்னேற்றமுண்டு. பொருள் லாபமும் கிட்டும். தேக சுகமும் சிறிது பாதிக்கப்படும்.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினல் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினல் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## ஈராக்கின் கணித மேதை!

### 11 வயதுச் சிறுவனின் சாதனே!

ஈராக் ஒரு கணிதமேதையைப் பெற்றுள்ளது. அப்துல் சலாம் என்ற 11 வயதுச் சிறுவன் எல்லாக் கணிதங்களுக்கும் நொடிப்பொழுதில் விடை அளிக்கக்கூடிய திறமை பெற்றுள்ளான்.

இவனுக்கு இன்னும் பெருக்கல் வாய்ப்பாடு கற்றுக் கொடுக்கப்படாவிட்டாலும் அப்துல் சலாம் ஆசிரியர்களேத் திணறடித்து வருகிருன். பெருக்கல் கணக்குகளே மிகவும் துல்லியமாகக் கருதி சரியான விடையளித்து வருகிருன். பெருக்கல் சம்பந்தமான எல்லாவகைக் கணக்குகளுக்கும் கணக்கிடும் மிஷின் விடையளிப்பதற்கு முன்பு இவன் விடையளிக்கிருன்.

அப்துல் சலாம் தினமும் ஆறு ஷில்லிங் சம்பாதிக்கும் ஒரு ஏழை தொழிலாளியின் மகன். இவன் கணக்குகளே வழியுடன் செய்யாமலே அதற்கான விடைகளே உடனடியாக தருவதை ஒருநாள் இவனது ஆசிரியர் கண்டு திகைப்படைந்தார். அப்துலுக்கு ஒரு சகோதரரும் ஆறு சகோதரிகளும் உள்ளனர். றூமேனியர் குட் மாகாணத்தில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் இவன் ஐந்தாவது படிவத்தில் படித்து வருகிருன்.

பாக்தாத் டெலிவிஷன் ரேடியோவில் இவன் முதன் முதலில் தோன்றியவுடன் இவனுக்கு சுமார் 2000 பவுன் மதிப்புள்ள பொருள்களே மக்கள் பரிசாக அனுப்பியுள்ளனர் இராசபிரதமர் மேஜர் ஜெனரல் காசிம் இவனுக்கு ஒரு டெலிவிஷனும், ஒரு சிறு நிலப்பகுதியும அன்பளிப்பாக அளித்துள்ளார்.

## இத்தால்...

# சகலரும் அறிவது!

### இலங்கைப் பத்திரிகையின் திருகுதாளங்கள்!

தென்னிந்திய தேர்தல் செய்திகளே நம் இலங்கைப்பத்திரிகைகள் வெட்டி, ஓட்டிப் பிரசுரித்து, உண்மையை மூடிமறைத்துவந்த திருகுதாளங்களே வெட்ட வெளிச்சமாக அம்பலப் படுத்திய புதினத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியுமா?

கொழும்பு—11 — இரா. வேணு,

### சரியான சூடு!

கடந்த 4-2-62- ம்திகதி புதினத்தில் "எங்கே இருக்கிறது ஆபாசம்?" என்று நடிகை ராதாராணி எழுதிய விஷயத்திற்கு, கடந்தவாரம் நடிகை தேவிகா "ஆபாசம் இருக்கிறதே!" என்று எழுதியிருந்த விஷயம் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குச் சரியான சூடு என்பதை மறுக்க முடியாது!

குருநகர். — செல்வி. பி. கிறேஸ்.

### ஸ்வர்ணலதாவின் கதை!

கடந்த மூன்று வாரங்களாகப் புதினத்தில் தொடர்ந்து வெளிவந்த "முற்பிறப்பை அறிந்த சிறுமி ஸ்வர்ணலதாவின் கதை" படிப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது!

லுணுகலே. — சி. கருப்பையா

### கசிப்புச் சீனி!

'கசிப்பு' என்ற கள்ளச்சாரயம் செய்வதற்காக நம் அரசாங்கச் சீனி விற்கப் படுவதாக எழுதியிருந்தீர்கள். அவ்வளவுதூரம் போவானேன்?... நம் இலங்கையில் உற்பத்தியாகும் சீனியைக் கொஞ்சம்போல் வாயில் போட்டுப் பாருங்கள். கசிப்பைவிட மிகமோசமாகக் கசக்கும்!

புத்தளம். — எஸ். எம். காமில்.

### திருவிளேயாடல்!

வேலணே தெற்கு இலந்தைவனம் ஐயனர்கோவிலில் உள்ள பிராமணர்களின் திருவிளேயாடல்களில் இவை ஒருசில: பாமர மக்கள் அர்ச்சனே செய்வதற்கு சாமான்கள் கொண்டு சென்ருல், அதை அர்ச்சனே செய்யாமலே திருப்பிவிடுகிருர்களாம். மேலும் கோயில் தர்மகர்த்தாவை விசாரித்தால் இக்கோயிலில் பங்கு உள்ளவர்களுக்கே அர்ச்சனே செய்வதற்கும் பிரவேசிப்பதற்கும் அனுமயளிக்கப் படுமென்று கூறுகிருர்களாம்!

வேலணே. — இ. கதிர்காமு

### நீச்சல் உடை!

'ஆபாச உடையுடன் நடிக்கமாட்டேன்' என்று நடிகை சரோஜாதேவி சொன்னதாக ஒரு பத்திரிகையில் படித்தேன். அப்படி அவர் சொல்லியிருந்தால் அது வீண்பேச்சு! ஏனென்ருல், அவர் ஹிந்திப் படங்களில் தொட்டியில் குளிப்பதாக வரும் காட்சியும், தமிழ்ப்படங்களில் ஆபாச உடைகளுடன் தோன்றுவதும் எல்லோரும் அறிந்த பரம இரகசியம்! ஆனல், 'நீச்சல் உடையில் நடிப்பது ஆபாசம்' என்று துணிந்து சொன்ன நடிகை தேவிகா, "கண்டிப்பாக நீச்சல்உடையில் நடிக்கமாட்டேன்" என்று செல்லியிருப்பதை நம்பலாம். ஏனென்ருல், அவர் சொன்ன சொல்லேக் காப்பாற்றுவார் என்பது எமக்கு நன்ருகத் தெரியும்.

கண்டி. பி. எம். குமார்.

### அடுத்த தொடர் என்ன?

முன்னர் புதினத்தில் தொடராக வெளிவந்துகொண்டிருந்த 'கரோல் செஸ்மன் கதை' சுவையாக இருந்தது அது முடிந்த பிறகு அதைப்போல் வேறு ஒரு தொடர் விஷயத்தை ஆரப்பிப்பீர்கள் என அதிர்பார்த்தேன். ஏமாந்தேன்! அதைப்போல் வேறு ஒரு தொடர் அம்சத்தை ஆரம்பித்தால் நன்ருக இருக்கும் என்பது என் அபிப்பிரர்யம். ஆரம்பிப்பீர்களா?

கல்கின்னே. —ஏ. எம். காஸிம்.

(இந்த இதழில் 'அடல்ப் ஈச்மன் கதை' ஆரம்பமாகியிருக்கிறது. தொடர்ந்து படித்துப்பாருங்கள். —ஆசிரியர்)

Registered a newspepar at the G. P. O

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

# அமெரிக்க முன்னேற்றத்தில் அடங்கியுள்ள இரகசியம்!

**புதுமையில் மோகம், சிந்தனைச் செறிவு, சுதந்திர வேட்கை இவைகளே அமெரிக்கர்கள் துரிதமாக முன்னேறுவதற்கு முக்கிய காரணங்களாகும்**

''சமூக அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஏற்கெனவே வரையறை செய்துள்ள கோட்பாடுகளையும், சித்தாந்தத்தையும் அமெரிக்கா நிராகரித்து வந்திருக்கிறது. ஏற்கெனவே வகுக்கப்பட்ட கொள்கைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் புதுமையான சோதனைகளை நடத்திக்கொண்டேயிருந்தனர். நடைமுறையில் அவர்கள் தமக்குச் சரியாகப் படும் முறைகளையே பின்பற்றி வந்தார்கள். இந்தவிதமாகத்தான் அமெரிக்கர்கள் தமது நாட்டின் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் அபிவிருத்தி செய்து கொண்டனர்'' இவ்வாறு ஜனதிபதி கென்னடியின் விசேஷ உதவியாளரான ஸ்ரீ ஸ்லிங்கர் கூறியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகப் பரிட்சை மண்டபத்தில் 'அமெரிக்க முன்னேற்றம்: பழைய, புதிய எல்லைகள்' என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்துகையிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவர் மேலும் கூறியதாவது: ''அமெரிக்க மக்கள் புதுப் புது சோதனைகளை நடத்திக் கொண்டேயிருந்தனர். துணிகரமான செயல்களைச் செய்வதில் தீவிரமாக ஈடுபடலாயினர் இதனால்தான் அமெரிக்க மக்கள் பல துறைகளிலும் துரிதமாக முன்னேற முடிகிறது,

ஒவ்வொரு நாடும் தனது சக்திக்கும், மரபுக்கும், மேதைக்கும் தகுந்தவாறே முன்னேற முடியும். அமெரிக்கரின் அனுபவம் பல வழிகளில்தனிச் சிறப்பு வாய்ந்தது. அமெரிக்கருக்கு மற்றோர் அனுகூலம் இருந்தது. ஜனத்தொகை அதிகமாக இல்லை. ஜனத்தொகைக்குத் தகுந்த இயற்கைவளங்கள் இருந்தன ஆனல், இந்த அனுகூலம் மாத்திரம் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. இந்த அனுகூலம் மாத்திரம் போதுமென்றால், ஐரோப்பியர்கள் அமெரிக்காவில் குடியேறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, சிவப்பு இந்தியர்கள் அபிவிருத்தி செய்திருக்க முடியும், ஆகவே, பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி முதலியவற்றை மக்கள் மேற்கொள்வதில் காட்டும் ஊக்கம், சிரத்தை. ஆர்வம், விறுவிறுப்பு முதலியவையே முக்கியம். இவையும் வேறுபல காரணங்களும் சேர்ந்து ஒரு உயிர்த்தத்துவத்தையே உருவாக்கின;

இந்த உயிர்த் தத்துவமே அமெரிக்காவின் துரிதமான முன்னேற்றத்திற்குக் காரணம். கல்வியில் அமெரிக்க மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது மற்றோர் காரணம் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் தேசிய முதலீடுஅதிகரித்ததால்.உற்பத்திச் சக்தியும் பெருகியது, அமெரிக்காவின் முன்னேற்றத்திற்குக் கீழ்க்கண்ட காரணங்களையும்முக்கியமாகக் குறிப்பிடலாம்:- ஸ்தல சுயாட்சியிலும், பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களிலும் நம்பிக்கை, தனிமனித சுதந்திரத்திலும் முயற்சியிலும் நம்பிக்கை, கூட்டுறவு நடவடிக்கைகளின் நலன்களை உணர்ந்திருத்தல்''

## கல்யாணம் செய்வதற்கு அரசாங்கம் உதவி!

தாலி, கூறைக்குப் பணமில்லாததால், ஆசை இருந்தும் கல்யாணம் செய்யமுடியாமலிருக்கும் வாலிபர்கள் நம் நாட்டில் பலர் இருக்கிறார்கள். அதைப்பற்றி நாட்டுக்கோ, அரசாங்கத்துக்கோ எவ்வித கவலையுமில்லை.

கெய்ரோவிலுள்ள டமீட்டா நகரில் ஒருவர் கல்யாணம் செய்வதானல் தம்பதிகள் புதுக்குடித்தனம் ஆரம்பிக்கத்தேவைப்படும் வீட்டுத் தளபாடச் சாமான்களில் அரைவாசியை அரசாங்கம் இலவசமாக வாங்கிக் கொடுக்கிறது. அப்படியிருந்துங்கூட மாதாமாதம் கல்யாணம் செய்துகொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவதாக அரசாங்கம் கவலைப் படுகிறது.

இருபது வருடங்களுக்கு முன் இங்கு மாதமொன்றுக்குச் சராசரி நூறு கல்யாணங்கள் நடைபெற்றதாம். ஆனல் இப்பொழுது ஆகக் கூடியது அறுபது கல்யாணங்கள்தான் நடைபெறுகின்றன.

''இங்குள்ள பெண்கள் 'கட்டுப் பெட்டிகள்.' உறவினர் யாராவது காவலுக்குக் கூடச் செல்லாவிட்டால் அவர்கள் காதலர்களோடு தனியே வெளியே செல்லமாட்டார்கள். அதனாலேயே கல்யாணம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு போகிறது'' என்று டமீட்டா பிரதம விவாகப்பதிவாளர் ஜனுப் அப்துல் சலாம் அபு டோனியா கூறினர்.

## துவேஷத்தை வளர்க்க வேண்டாம்!

'சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சனைகளைச் சாத்தியமில்லாத வழியில் தீர்க்கதரிசனமில்லாது தீர்த்து வைக்கலாமென்று எண்ணுகிறார் திரு. எம். சி. சுப்பிரமணியம்'' என்று திரு. ஜே. எஸ். சுந்தரம் கூறுகிறார்.

''சமூகத் தொண்டர்கள் சமூகத்தின் இன்றியமையாத தேவைகள் எவையென்பதை ஆராய்ந்து, அதற்கேற்பப் பணி புரிவதுதான் சிறந்த முறை. பொருளாதார கல்வித்துறைகளில் சிறுபான்மைத் தமிழர் முன்னேற வேண்டியதுதான் இன்றைய உடனடித் தேவை. அடுத்ததாக தீண்டாமையைப் போக்கவழி வகுக்க வேண்டும். அதைவிட்டு பெரும்பான்மைத் தமிழருக்கும், சிறுபான்மைத் தமிழருக்குமிடையேதுவேஷத்தை வளர்ப்பதன் மூலம் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பெறலாமெனக் கனவுகாணுகிறார் இதன் விளைவு நம்மை எங்கோகொண்டுபோய்விட்டுவிடும் என்பதைத் திரு. சுப்பிரமணியம் உணரவேண்டும்'' என்று திரு. சுந்தரம் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!
நவீன தயாரிப்பாக
**'மில்க்வைற் சோப்'**
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்




வெளிவந்துவிட்டது! புதிய பதிப்பு!

**தமிழ் மரபு**

G. C. E. வகுப்புக்கான மொழிநூல்

✻ வித்தியாதிபதியின் அங்கீகாரம் பெற்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
பண்டிதர் சோ. இளமுருகனர்

ஆகிய இருபெரும் தமிழறிஞர்களும் மிகவும் புகழ்ந்து பாராட்டி அணிந்துரை வழங்கியிருக்கிறார்கள்,

எழுதியவர்:
வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

விலை ரூபா 3-50 [தபாற் செலவு சதம் 40]

விற்பனையாளர்;

**ஆனந்தா அச்சகர் - புத்தகசாலை,**
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.